சிறுபஞ்சமூலம்

பெருங்குணத்தார்ச் சேர்மின் பிறன்பொருள் வௌ வன்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின் - ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின் வருங்காலன் திண்ணிதே
வாய்ச்சொல்லே யன்று வழக்கு .

-காரியாசான் .

நூல்குறிப்பு :

பன்னிரு பாட்டியலில் கூறியதுபோல் , குறைந்த அடிகளையுடைய செய்யுள்களால் அறம், பொருள், இன்பம் என்பன கொண்டு அமைந்த நூல் பதினெண்கீழ்க்கணக்கு ஆகும். பதினெண்கீழ்க்கணக்கு என்ற தொகுப்பினுள் 18 நூல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம் .

மருத்துவ நூலில் கூறப்பட்ட கண்டங்கத்தரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லிவேர் ஆகிய பஞ்சமூலங்கள் மக்கள் பிணிகளைத் தீர்ப்பதுபோல், இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அடங்கிய " ஐந்தைந்து " பொருள்களாலும் தன்னைப் படித்து உணர்வோர்களின் குறைகளை நீக்கி நிறைகளைப் பெருக்கி வாழ்ந்திட வழிகாட்டும் சிறப்புடையது .

ஆசிரியர் குறிப்பு :

இந்நூலின் ஆசிரியர் காரியாசான் ஆவர். இவரைச் சமணர் என்று கூறினும் இவர் தம் நூலில் சமண சமயக் கருத்துகள் குறைவாகவும் சமயப் பொதுக் கருத்துகள் மிகுதியாகவும் உள்ளன .

அருஞ்சொற்பொருள் :

சேர்மின் - சேருங்கள் ; வௌவன்மின் - கவர்ந்துகொள்ளாதீர்கள் (திருடாதீர்) ; ஒருங்குணர்ந்து - எல்லா வழிகளிலும் எண்ணிப் பார்த்து ; திண்ணிதே - உறுதியானதே .

கருத்துரை :

நற்குணமுடையாரைச் சேருங்கள்; பிறர்பொருளைக் கவராதீர்கள்; தீய குணமுடையோரிடம் நட்பு கொள்ளாது நீங்கியிருங்கள்; நன்குயோசித்து தீய சொற்களைப் பேசாது இருங்கள்; காலன்வருவான். இது உண்மை .

KTBS Not to be republished

பயிற்சி

I. சரியான விடையைத் தெரிவு செய்க :

1. பெருங்குணத்தார் _____

அ) கழிமின் ; ஆ) சேர்மின் ;

இ) காமின் ; ஈ) வெளவன்மின் .

2. பிறன்பொருள் _____

அ) சேர்மின் ; ஆ) வெளவன்மின் ;

இ) கழிமின் ; ஈ) காமின்

II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1. யாரிடம் சேர்ந்து பழகவேண்டும் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது?
2. தீச்சொல் சொல்லாதிருக்க எவ்வாறான உணர்வைக் கடை பிடிக்கவேண்டும் ?

III. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக ;

1. சிறுபஞ்சமூலம் நூலின் சிறப்பினை விளக்குக .

IV. இடம் சுட்டிப் பொருள் விளக்குக ;

1. ஒருங்குணர்ந்து தீச்சொல்லே காமின் .
2. வாய்ச்சொல்லே யன்று வழக்கு .

மொழிப்பயிற்சி

1. சேர்த்து எழுதுக

பெரும் + குணத்தார் ; ஒருங்கு + உணர்ந்து ;

தீ + சொல் ; சொல்லே + அன்று .

2. பிரித்து எழுதுக

வருங்காலன்; வாய்ச்சொல் .

K T B S Not to be republished